**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

STC **.No. 1154/2025**

**2026 – ம் ஆண்டு ஜுன் மாதம் 02–ம் தேதி செவ்வாய்கிழமை அ.சா. 1– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **அ.சா.** | : 1 | | |
| **பெயர்** | : **கார்த்திக்** | **தொழில்** | : **கொத்தனார்** |
| **த/பெ.** | : **முருகேசன்** | **வட்டம்** | : அரியலூர் |
| **கிராமம்** | : பள்ளக்கிருஷ்ணாபுரம் | **வயது** | : 43 |

<u>02.06.2026</u>

**( எதிரி ஆஜர் இல்லை எதிரிகள் தரப்பில் BNSS பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது )**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பள்ளக்கிருஷ்ணாபுரத்தில் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கொத்தனாராக வேலை செய்து வருகிறேன். 25.05.2025 அன்று இரவு 08.00 மணிக்கு எனக்கு சொந்தமான TN 61 H 5848 என்ற பதிவு எண் கொண்ட ஹீரோ இருசக்கர வாகனத்தில் நானும் என்னுடன் வேலை செய்யும் மணிவண்ணன் என்பவரும் சென்றோம். நான்தான் இருசக்கர வாகனத்தை ஓட்டினேன். மணிவண்ணன் எனக்கு பின்னால் அமர்ந்து வந்தார். நாங்கள் கீழமாத்தூரிலிருந்து பள்ளக்கிருஷ்ணாபுரம் நோக்கி சென்று கொண்டிருந்தபோது சுப்பிரமணியர் கோவில் அருகே நாங்கள் மெதுவாக சாலையின் இடது புறம் சென்றுகொண்டிருந்தபோது எதிரே பல்சர் இருசக்கர வாகனத்தில் ஒருவர் வேகமாக வந்து எங்கள் வாகனத்தில் நேராக மோதிவிட்டார். அதில் எனக்கு இடது கால் உடைந்துவிட்டது. மணிவண்ணனுக்கு இடது கண்ணத்தில் லேசானா காயம் ஏற்பட்டது. என் நண்பர்கள்

என்னை ஆட்டோ மூலமாக அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டுபோய் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். போலீசார் அங்கு வந்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும்.

**( எதிரியை அடையாளம் காட்ட வேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.